தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 13.05.2026**

**முன்னிலை**

## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 16443/F/2024**

திரு.பி.பாலசுப்பிரமணி .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர்,
நகர் ஊரமைப்புத்துறை,
மாவட்ட நகர் ஊரமைப்பு,
தேனி-625531.

.. பொது அதிகார அமைப்பு

பொதுதகவல் அலுவலர்,
செயல் அலுவலர்,
ஆண்டிபட்டி பேரூராட்சி,
ஆண்டிபட்டி,
தேனி மாவட்டம்-625 512.

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 13.05.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.பி.பாலசுப்பிரமணி அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள் 2012, விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத்தகவல் அலுவலர் திரு.வீ.விஜயகண்ணன், மேற்பார்வையாளர் / வரைவாளர் நிலை II, மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கதவு எண்.446/A, 17வது வார்டு, நேருஜி வீதி, அல்லிநகரம், தேனி மாவட்டம்-625531 மற்றும்

பா.இராதாகிருஷ்ணன், செயல் அலுவலர் (பொ), ஆண்டிபட்டி பேரூராட்சி, தேனி மாவட்டம் அவர்கள் ஆஜரானார்கள். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், தாக்கல் செய்துள்ள மனுவில் தேனி மாவட்டம் ஆண்டிபட்டி வட்டம் சக்கம்பட்டி கிராமம் இந்து ஆரம்பப்பள்ளி DTCP அப்ரூவல் மற்றும் புளூ பிரிண்ட் நகல் தொடர்பாக 4 இனங்களில் தகவல்களைக் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் 02.05.2024 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். மனுதாரர் தனக்கு சரியான தகவல் வழங்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(1)ன் கீழ் 18.06.2024 நாளிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 03.07.2024 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். இந்நிலையில் மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 19(3)ன் கீழ் 11.12.2024 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (13.05.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து 07.05.2026 தேதியிட்ட கடிதம் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும் அதனைப் பெற்று மனுதாரர் மனநிறைவு கடிதம் வழங்கியுள்ளதாகவும் கூறி அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் பொதுத்தகவல் அலுவலரால் 07.05.2026 நாளிட்ட கடிதம் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதையும் மற்றும் மனுதாரரின் மனநிறைவு கடிதத்தையும் ஏற்று இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் முற்றாக்கம் செய்து உத்தரவிடுகிறது.

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 16443/F/2024**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு:-**

பொதுதகவல் அலுவலர்,
நகர் ஊரமைப்புத்துறை,
மாவட்ட நகர் ஊரமைப்பு,
தேனி-625531.

பொதுதகவல் அலுவலர்,
செயல் அலுவலர்,
ஆண்டிபட்டி பேரூராட்சி,
ஆண்டிபட்டி,
தேனி மாவட்டம்-625 512.

**மேல்முறையீட்டாளர்:-**

திரு.பி.பாலசுப்பிரமணி,
எண்.2/19.25, தோப்பூர் சந்து,
சக்கம்பட்டி போஸ்ட், ஆண்டிபட்டி,
தேனி-625512.

Copy to file: KR/PA

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005